<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.எஸ்.நாகராஜன், எம்.எல்,** கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண்.212/2017**

**நாள்: 03.02.2023** **வா.சா.1:**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகன் | தொழில் | : |
| த/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**<u>குறுக்கு விசாரணை 1ம் பிரதிவாதி தரப்பில்</u>**

3.5.2012 தேதியில் நான் ஏற்படுத்திகொண்ட கிரைய உடன்படிக்கை பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். நான் சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்னால் 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள அசல் கிரைய ஆவணங்களை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. சொத்தை பொறுத்து வில்லங்கசான்று எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. ரூ.35 லட்சத்திற்கு கிரைய உடன்படிக்கை போட்டோம். அட்வான்ஸ் தொகை ரூ 12 லட்சம் கொடுத்தேன். 1ம் பிரதிவாதி 2012ம் வருடமே போடிபட்டியில் உள்ள கார்ப்ரேசன் வங்கியில் சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கியிருந்தார் என்றால் அப்போது தெரியாது கிரைய உடன்படிக்கை பின்னிட்டு தெரிந்து கொண்டேன். எவ்வளவு நாட்கள் கழித்து தெரிந்து கொண்டேன் என்றால் 3 மாதத்திற்குள் தெரிந்து கொண்டேன். கிரைய உடன்படிக்கை ஆவணத்திலேயே கார்ப்ரேசன் வங்கியில் கடன் வாங்கிய விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம் ஆனால் அப்போது படிக்கவில்லை. கிரைய உடன்படிக்கையை படிக்காமல் கையெழுத்து போட்டேனா என்றால் எழுத்தர் படித்து காண்பித்தார் அதனால் முழுமையாக படிக்கவில்லை என்று சொல்லமுடியாது. 1ம் பிரதிவாதி ஏற்கனவே கடன் பெற்ற விவரம் தெரிந்து தான் உடன்படிக்கை ஏற்படுத்தி இருக்கிறேன் என்றால்

சரிதான். நான் கிரைய உடன்படிக்கை போட்டது காலி இடத்திற்கா என்றால் இல்லை வீட்டிற்கும் சேர்த்து தான். வாசாஆ.3 கிரைய உடன்படிக்கையில் சொத்து விவரத்தை படித்து பார்த்தேனா என்றால் ஓரளவு படித்தேன். தாவா சொத்தில் பூர்த்தி செய்யப்படாத வீடு என்று எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கிரைய ஒப்பந்தம்போடுவதற்கு முன்னால் தாவா சொத்தை நேரடியாக பார்வையிட்டு வீடு எந்த நிலையில் உள்ளது என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். வீடு கட்டப்பட்ட விவரத்தை ஏன் மறைத்துள்ளேன் என்றால் நான் மறைக்கவில்லை. எழுதியவர் மறைத்துள்ளார். நான் உண்மையில் சொத்தை கிரையம் செய்யும் நோக்கம் இருந்திருந்தால் வீட்டை முழுமையாக பார்த்து விட்டு உடன்படிக்கையில் எழுத வலியுறுத்தி இருப்பேன் என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கையில் காலி இடம் என்று மட்டுமே உள்ளது என்றால் ஆமாம். கிரைய உடன்படிக்கை ஏற்பட்ட காலத்தில் எனக்கு என்ன வேலை என்றால் சொத்தை வாங்கி விற்கும் வேலை தான். எனக்கு தனலட்சுமி வங்கி, யூனியன் வங்கி ஆகியவற்றில் கணக்கு உள்ளது. ரூ.12 லட்சம் முன்பணம் எந்த வங்கியிலிருந்து எடுத்துக் கொடுத்தேன் என்றால் கோகுலம் சிட்பண்ட்ஸ் நிறுவனத்தில் இருந்து சீட்டு பணத்தை எடுத்துக் கொடுத்தேன். அதற்கான ஆவணம் ஒப்படைக்கமுடியுமா என்றால் முடியும். வருமான வரி 2019-2020 முதல் செலுத்தி வருகிறேன். 2011-2012 வருடத்திற்கு கட்டசொல்லி நோட்டீஸ் வந்தது அதையும் கட்டியுள்ளேன். கிரைய அட்வான்ஸ் தொகையை வருமான வரி கணக்கில் காட்டியிருக்கிறேனா என்றால் இல்லை. உண்மையில் அட்வான்ஸ் தொகை கொடுத்திருந்தால் வருமான வரி கணக்கில் காட்டியிருப்பேன் என்றால் சரியல்ல. பாக்கியுள்ள கிரைய தொகை ரூ23 லட்சத்தை செலுத்த முயற்சி எடுத்தேனா என்றால் ஆமாம். அதற்கான ஆவணம் எதுவும் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றம் சொன்னால் செலுத்த தயாராக உள்ளேன். முன்பணம் பணமாக தான் கொடுத்தேன். இதை பொறுத்து வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எத்தனை ரூபாய் நோட்டுகளாக கொடுக்கப்பட்டது என்றால் நினைவில்லை. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் உடன்படிக்கை தேதிக்கு முன்னரே அறிமுகம் உண்டா என்றால் உண்டு. 1ம் பிரதிவாதியும் என்னை போல் ரியல் எஸ்டேட் செய்பவர் தான். உடுமலைபேட்டை டவுன் சிவசுப்ரமணியம் லேஅவுட்டில் வசிக்கும் செல்லமுத்து மகன் செல்வராஜ் என்பவரை எனக்கு தெரியுமா என்றால்

தெரியும். அவர் உடுமலையில் பல வருடமாக பைனான்ஸ் தொழில் செய்கிறார் என்றால் ரியல் எஸ்டேட் செய்த வகையில் தெரியும். நான் செல்வராஜ் என்பவரிடம் வேலைக்கு இருக்கிறேன் என்றால் சரியல்ல. செல்வராஜ்க்காக வட்டி வசூல் செய்து கொடுப்பது, வழக்குபோடுவது தான் என் வேலை என்றால் சரியல்ல. நானும் செல்வராஜும் நீதிமன்றத்திற்கு வெளியே இன்றைய தினம் பேசிக்கொண்டிருந்தோம் என்றால் ஆமாம். வாசாஆ.3 கிரைய உடன்படிக்கையில் மேற்சொன்ன செல்வராஜ் மனைவி லாவண்யா என்பவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். என்ன காரணம் என்றால் ஒன்றுமில்லை அவரும் வந்திருந்தார் கையெழுத்து போட்டார். லாவண்யாவை யார் அழைத்து வந்தார் என்றால் முதலில்தகவல் சொல்லியிருந்தேன். அவரே இரு சக்கர வாகனத்தில் வந்தார். ராஜேஸ் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். ராஜேஸ் என்பவர் உடுமலையில் ஆட்டோ பைனான்ஸ் செய்கிறார் என்றால் தற்சமயம் செய்கிறார் அந்த சமயத்தில் ரியல் எஸ்டேட் தொழில் தான் என்னுடன் செய்தார். 1ம் பிரதிவாதி சம்பந்தப்பட்ட இதர ஆவணங்கள் அதே போல் செல்வராஜ், லாவண்யா சம்பந்தப்பட்ட பிற ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் ஆமாம். வாசாஆ.3 பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே உள்ள அலுவலகத்தில் செய்தார்கள் பெயர் நினைவில்லை. ஒப்பந்தம் ஜானகிராமன் என்பவரால் தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் ஆமாம். கிரைய உடன்படிக்கையில் ஜானகிராமன் முத்திரை எதுவும் பதியப்படவில்லை என்றால் ஆமாம். அவர் 2012ம் வருடம் காலம் ஆகிவிட்டார் என்றால் தெரியவில்லை. ஜானகிராமன் இறந்த விவரம் தெரிந்தே வாசாஆ.3 அவர் தயாரித்தது போல் தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. ஜானகிராமன் தயாரிக்கும் ஆவணங்களில் முத்திரை வைத்து கையெழுத்து போடுவது அவர் வழக்கம் என்றும் வாசாஆ.3 ஐ போல் உள்ள ஆவணங்களில் கையெழுத்து செய்வதில்லை என்றால் தெரியவில்லை. வாசாஆ.3 ஆவணம் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் தெரியாது. நான் மோசடியாக தயாரித்த வாசாஆ.3 அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. செல்வராஜ்க்கும் 1ம் பிரதிவாதிக்கும் 17.8.2012ல் ஏற்பட்ட கிரைய உடன்படிக்கையில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் 17.8.2012 சான்றிட்ட ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து பி.வாசாஆ.1. 20.6.2013ல் செல்வராஜ்க்கும் 1ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட

கிரைய உடன்படிக்கையில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த ஆவணம் பிவாசாஆ.2. 12.1.2016 ல் 1ம் பிரதிவாதிக்கும் செல்வராஜ் மனைவி லாவண்யா என்பவருக்கும் ஏற்பட்ட கிரைய உடன்படிக்கையில் முதல் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் ஆமாம். அது பிவாசாஆ.3. செல்வராஜ்க்கும் எனக்கும் பைனான்ஸ் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு என்மீது காவல்துறையில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. அதற்காக என் பெயரிலுள்ள வீட்டை செல்வராஜ்க்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் அதற்காக கொடுக்கவில்லை வாங்கியதால் கொடுத்தேன். 30.12.2013 தேதியில் கிரையம் எழுதிகொடுத்தேன் என்றால் ஆமாம். அந்த ஆவணம் பிவாசாஆ.4. நான் என்னுடைய வீட்டை விற்கும் நிலையில் இருந்திருப்பதால் நான் 1ம் பிரதிவாதி சொத்தை வாங்கும் அளவிற்கு வசதி கிடையாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும் செல்வராஜ்க்கும் இடையே ஏற்கனவே கடன் கொடுக்கல் வாங்கல் இருந்துள்ளது என்றும் அதற்காக ஏற்படுத்தப்பட்ட கிரைய உடன்படிக்கைகளில் செல்வராஜ்ஜிடம் வேலை பார்த்ததால் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2017ம் வருடம் செல்வராஜ்க்கும் 1ம் பிரதிவாதிக்கும் பணம் கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை ஏற்பட்டது என்றால் தெரியவில்லை. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை நானும் செல்வராஜ், அவரது மனைவி லாவண்யாவும் சேர்ந்து கிரைய உடன்படிக்கையை மோசடியாக தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கையெழுத்து செல்வராஜ்க்கும் எனக்கும் நன்கு பரிச்சயம் என்றால் சரியல்ல. வாசாஆ.3 மோசடியான ஆவணம் என்றும் அதனால் தான் செல்வராஜ் மனைவி லாவண்யாவை சாட்சியாக போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. செல்வராஜ்ஜிடம் வேலை பார்ப்பதால் ரூ.12 லட்சம் கடன் கொடுக்கும் தகுதி எனக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் 2012 ல் ஒப்பந்தம் போட்டு ஏறக்குறைய 5 ஆண்டுகள் கழித்து தான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கேட்கிறேன் என்றால் கொடுத்த பணத்தை கொடுத்தால் போதும். நான் 3 வருடத்திற்குள் வழக்கை தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் வழக்கு போடும் வரை பிரதிவாதிகள் சகஜமாக பேசிவந்தார்கள். 5 வருடங்கள் கழித்து வழக்கு போட்டுள்ளதால் காலவரை சட்டபடி வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. லாவண்யாவை சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் என் வழக்கறிஞர் தான் முடிவு செய்வார். கிரைய உடன்படிக்கை மோசடியானது என்றும்

உண்மையாக இருந்திருக்கும் பட்சத்தில் பதிவு செய்திருப்போம் என்றால் சரியல்ல. இதற்கு முன்னர் கிரைய உடன்படிக்கை பிரதிவாதிகளிடம் செய்திருக்கிறோம் அப்போது அவர்கள் வேறு நபர்களுக்கு சொத்தை விற்பதற்கு ஒப்புக்கொண்டார்கள். பிரதிவாதிக்குஇதற்கு முன்னர் எப்போது பணம் கொடுத்தேன் என்றால் ஒரு புத்தகத்தில் எழுதி வைத்துள்ளேன். வங்கி பரிவர்த்தனை மூலம் பணம் கொடுத்துள்ளேன். தேவைப்பட்டால் எடுத்து வருகிறேன். பைனான்ஸ் நடவடிக்கைக்காக பராமரிக்கப்படும் புத்தகமா என்றால் இல்லை. ரியல் எஸ்டேட் செய்வதால் எழுதி வைப்பேன். ஒருமுறை கூட பிரதிவாதியிடம் ஏற்படுத்திக்கொண்டதாக சொல்லும் கிரைய உடன்படிக்கை படி கிரைய பத்திரம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. பணம் வாங்கி கொண்டு ரத்து செய்வது தான் வாடிக்கை என்றால் சரியல்ல. செல்வராஜ் ரத்து செய்த கிரைய உடன்படிக்கையில் நானும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் ஆமாம். கிரைய உடன்படிக்கை மோசடியானது என்றும் இதன் அடிப்படையில் நான் பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. ரூ12 லட்சம் முன்பணமும் பாக்கியுள்ள ரூ23 லட்சம் கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு கிடையாது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

ஒப்பம் எஸ்.நாகராஜன்

கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.(பொறுப்பு)